# வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

## TNPSC -ஒருங்கிணைந்த குடிமைப் பணிகள் தேர்வு-IV

## (தொகுதி-IV பணிகள்)

**தேர்வு:** தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் (TNPSC)

**பாடம் :** தமிழ் தகுதி மற்றும் மதிப்பீட்டுத் தேர்வு

**பகுதி :** அலகு I: இன எழுத்துக்கள்

## Table of Contents


**இன எழுத்துக்கள்** ........ 2

**1. உயிர் எழுத்துக்களின் இனங்கள்** ........ 2

**2. மெய் எழுத்துக்களின் இனங்கள்** ........ 3

**முந்தைய ஆண்டு வினாக்கள்** ........ 5



**© Copyright**

The Department of Employment and Training has prepared the Competitive Exams study material in the form of e-content for the benefit of Competitive Exam aspirants and it is being uploaded in this Virtual Learning Portal. This e-content study material is the sole property of the Department of Employment and Training. No one (either an individual or an institution) is allowed to copy or reproduce the matter in any form. The trespassers will be prosecuted under the Indian Copyright Act. It is a cost-free service provided to the job seekers who are preparing for the Competitive Exams.

**Director,**

**Department of Employment and Training.**

## இன எழுத்துக்கள்

பிறக்கும் இடம், ஒலிக்கும் முயற்சி மற்றும் வடிவம் ஆகியவற்றில் ஒற்றுமை உடைய எழுத்துக்கள் இன எழுத்துக்கள் (நட்பு எழுத்துக்கள்) எனப்படும். தமிழ் மொழியில் எழுத்துக்கள் உயிர் இனங்கள், மெய் இனங்கள் என பிரிக்கப்படுகின்றன.

### 1. உயிர் எழுத்துக்களின் இனங்கள்

உயிர் எழுத்துக்களில் குறிலுக்கு நெடிலும், நெடிலுக்குக் குறிலும் இன எழுத்துக்கள் ஆகும்.

அ → ஆ

இ → ஈ

உ → ஊ

எ → ஏ

ஒ → ஓ

**விதிவிலக்குகள்:**

குறில் எழுத்து இல்லாத ஐ என்னும் எழுத்துக்கு இ இன எழுத்தாகும்.

ஔ என்னும் எழுத்துக்கு உ இன எழுத்தாகும்.

சொல்லில் உயிர் எழுத்துகள் சேர்ந்து வருவது இல்லை. அளபெடையில் மட்டும் நெடிலைத் தொடர்ந்து அதன் இனமாகிய குறில் எழுத்து சேர்ந்து வரும்.

(எ.கா.) ஓஒதல், தூஉம், தழீஇ

## 2. மெய் எழுத்துக்களின் இனங்கள்

மெய் எழுத்துக்கள் மூன்று வகையாகப் பிரிக்கப்பட்டு, அவை ஒவ்வொன்றுக்குள்ளும் இன எழுத்துக்கள் உள்ளன:

**வல்லினம்:** க், ச், ட், த், ப், ற்

**மெல்லினம்:** ங், ஞ், ண், ந், ம், ன்

**இடையினம்:** ய், ர், ல், வ், ழ், ள்

ஆறு வல்லின மெய் எழுத்துகளும் ஆறு மெல்லின எழுத்துகளும் இன எழுத்துகள் ஆகும்.

சொற்களில் மெல்லின மெய் எழுத்தை அடுத்துப் பெரும்பாலும் அதன் இனமாகிய வல்லின எழுத்து வரும்.

**(எ.கா.)** திங்கள், மஞ்சள், மண்டபம், சந்தனம், அம்பு, தென்றல்

- க் – ங்: திங்கள் (ங்-க)
- ச் – ஞ்: மஞ்சள் (ஞ்-ச)
- ட் – ண்: மண்டபம் (ண்-ட)
- த் – ந்: சந்தனம் (ந்-த)
- ப் – ம்: அம்பு (ம்-ப)
- ற் – ன்: தென்றல் (ன்-ற)

‘ட’ கரத்திற்கு முன் ‘ண’ வரும் – **எ.கா:** கண்டம்; ‘ற’ கரத்திற்கு முன் ‘ன’ வரும் – **எ.கா:** மன்றம்.

இடையின எழுத்துகள் ஆறும் (ய், ர், ல், வ், ழ், ள்) ஒரே இனமாகும்.

தமிழ் எழுத்துகளில் ஆய்த எழுத்துக்கு மட்டுமே இன எழுத்து இல்லை.

**மாதிரி வினாக்கள் (புத்தகப் பயிற்சி வினாக்கள்)**

**1. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது?**

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கண்ணில் ஈ) தம்பி

**விடை:** இ) கண்ணில்

**2. தவறான சொல்லை வட்ட மிடுக.**

அ) கண்டான் ஆ) வென்ரான் இ) நண்டு ஈ) வண்டு

**விடை:** ஆ) வென்ரான்

**3. மெல்லினத்திற்கான இன எழுத்து இடம்பெறாத சொல் எது? 1.**

அ) மஞ்சள் ஆ) வந்தான் இ) கல்வி ஈ) தம்பி

**விடை:** இ) கல்வி

**2. பின்வரும் சொற்களைத் திருத்தி எழுதுக**

- தெண்றல் – தென்றல்
- கன்டம் – கண்டம்
- நன்ரி – நன்றி
- மன்டபம் – மண்டபம்

**3. இப்பாடலில் இடம் பெற்றுள்ள இன எழுத்துச் சொற்களை எடுத்து எழுதுக.**

தங்கப் பாப்பா வந்தாளே!

சிங்கப் பொம்மை தந்தாளே!

பஞ்சு போன்ற கையாலே!

பண்டம் கொண்டு வந்தாளே!

பந்தல் முன்பு நின்றாளே!

கம்பம் சுற்றி வந்தாளே!

தென்றல் காற்றும் வந்ததே!

தெவிட்டா இன்பம் தந்ததே!

**விடை:** தங்க, சிங்க, பஞ்சு, பண்டம், பந்தல், கம்பம், தென்றல், வந்தாளே, நின்றாளே, வந்ததே, தந்ததே.

## முந்தைய ஆண்டு வினாக்கள்

**1. 'ஐ', 'ஔ' என்ற எழுத்துக்களின் இன எழுத்துகளைக் கண்டறிக (TNPSC/PSGS/2022)**

A) அ, இ

B) இ, உ

C) ஈ, ஊ

D) அய், அவ்

**விடை: ஆ) இ, உ**

**2. தவறான சொல்லை கண்டறிக. (Madras High Court Exam 2021)**

(a) கண்டான்

(b) வென்றான்

(c) நண்டு

(d) வண்டு

**விடை: (b) வென்றான்**

**3. கீழ்க்கண்டவற்றுள் மெல்லினத்திற்கான இனவெழுத்து இடம் பெறாத சொல் எது? (2023 TNTET Paper -2)**

(A) மஞ்சள்

(B) திங்கள்

(C) கல்வி

(D) தென்றல்

**விடை: (C) கல்வி**

**4. தவறான சொல்லை வட்டமிடுக. (2022 TNTET Paper -1)**

(A) நண்டு

(B) கண்டான்

(C) வென்ரான்

(D) வண்டு

**விடை: (C) வென்ரான் (வென்றான் என்பதே சரி)**

**5. இனவெழுத்து இல்லாத தமிழெழுத்து: (2022 TNTET Paper -1)**

(A) மெய்யெழுத்து

(B) ஆய்த எழுத்து.

(C) உயிரெழுத்து

(D) உயிர் மெய்யெழுத்து

**விடை: (B) ஆய்த எழுத்து.**

**6. கூற்று, காரணம் சரியா? தவறா? (2022 TNPSC)**

**கூற்று** : ஒலிக்கும் முயற்சி, பிறக்கும் இடம் ஆகியவற்றில் ஒற்றுமை உண்டு தவறான சொல்

**காரணம் :** ஒற்றுமை உள்ள எழுத்துக்கள் இன எழுத்துக்கள் எனப்படும்

(A) கூற்று சரி, காரணம் சரி

(B) கூற்று சரி, காரணம் தவறு

(C) கூற்று தவறு, காரணம் சரி

(D) கூற்று தவறு, காரணம் தவறு

**விடை: (A) கூற்று சரி, காரணம் சரி**